**திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**பிறப்பிப்பவர் : முனைவர்.ச.விசாகன், இ.ஆ.ப.,**

ந.க.எண் : 8387/2018/ஊ.வ.1 நாள்.15.02.2022.

பொருள் : பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படை பணி நியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - மதுரை மாவட்டம் - பணியிடைக்காலமான மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) திரு.(லேட்)ஆர்.நவநீதகிருஷ்ணனன் என்பவரின் வாரிசுதாரரும்/மகனுமான திரு.என். சந்தானகிருஷ்ணன் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடல் - தொடர்பாக.

பார்வை :
1. சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்:5279/2018/டி1, நாள்:20.11.2018
2. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்:8387/2017/ஊ.வ.1, நாள்: 23.11.2018.
3. திரு.என்.சந்தானகிருஷ்ணன், த/பெ.(லேட்) ஆர்.நவநீதகிருஷ்ணன், கதவு எண்.5/739-1 சி.டி.ஒ.காலனி, பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல் என்பவரது விண்ணப்பம் நாள்:16.11.2018.
4. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் (வளர்ச்சி) அவர்களின் கடிதம் ந.க.எண். 52172/2018/ஊ.வ.3 நாள்.20.12.2018.
5. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்:8387/ 2017/ஊ.வ.1, நாள்:24.12.2018
6. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.8387/2017/ஊ.வ.1, நாள்: 11.12.2019.
7. அரசாணை (நிலை) எண்: 48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள்: 26.02.2021.
8. அரசுக்கடித எண்:6895/இ3/2021-5, நாள்:14.12.2021
9. சென்னை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.18355/2021/டி2, நாள்: 18.12.2021.

*****

ஆணை:

மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)-ஆகப் பணிபுரிந்து 19.10.2018 அன்று பணியிடைக்காலமான திரு.ஆர்.நவநீதகிருஷ்ணன் என்பவரின் வாரிசுதாரர் திரு.ந.சந்தானகிருஷ்ணன் என்பவருக்கு 25% இட ஒதுக்கீட்டில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கிட ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்கள் அனைத்து நிரப்பப்பட்டுள்ளதால் தனியரின் விருப்பத்தின் பேரில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க கேட்டு அளித்துள்ள விண்ணப்பத்தினை திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு மாற்றம் செய்ய உள்ளதாலும், தனியரை திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க இசைவினை வழங்கிட பார்வை 1-ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

எனவே, திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் இளநிலை உதவியாளருக்கான 25% இட ஒதுக்கீட்டு காலிப்பணியிடங்களின் அடிப்படையில், திரு.ந.சந்தானகிருஷ்ணன் என்பவருக்கு திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் வழங்குவதற்கான இசைவு பார்வை 2-ல் காணும் கடிதம் வழி தெரிவிக்கப்பட்டது.

அனைத்தொடர்ந்து, தனியர் கருணை அடிப்படை பணிநியமனத்திற்கான, அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளாரா என்று கூர்ந்தாய்வு செய்த பின்னர் பணிநியமனம் வழங்குமாறு திண்டுக்கல் மாவட்ட நியமன அதிகாரிக்கு "சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்:5279/2018/டி2, நாள்:07.12.2018இல் அறிவுறுத்தப்பட்டது.

இந்நேர்வில் திரு.என்.சந்தானகிருஷ்ணன் என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கிட கோரி பார்வை 3-ல் கண்டுள்ளவாறு சமர்ப்பித்துள்ள விண்ணப்பம், மதுரை மாவட்ட ஆட்சியர் பரிந்துரையுடன் பார்வை 4-ல் காணும் கடிதம் வழி வரப்பெற்றது.

அதனைத்தொடர்ந்து, மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)-ஆகப் பணிபுரிந்து 19.10.2018 அன்று பணியிடைக்காலமான திரு.ஆர்.நவநீதகிருஷ்ணன் என்பவரின் வாரிசுதாரர் திரு.ந.சந்தானகிருஷ்ணன் என்பவருக்கு மேலே பார்வை 5-ல் காணும் செயல்முறையின்படி கருணை அடிப்படையில், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரகம், வளர்ச்சி பிரிவில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, தனியர் 31.12.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்று பணிபுரிந்து வருகிறார். தனியரின் பணியை அரசளவில் வரன்முறைசெய்து உரிய ஆணை பிறப்பிக்கக் கோரி மேலே பார்வை 6-ல் காணும் கடிதம் வழியே சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டது.

இந்நேர்வில், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்துதல் தொடர்பாக, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட ஆணை மற்றும் வழிமுறைகள் பார்வை 7-ல் காணும் அரசாணையில் வெளியிடப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, பார்வை 7-ல் காணும் அரசாணையின் அடிப்படையில், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்துதல் தொடர்பாக, மேலே பார்வை 9-ல் காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் "மாவட்ட ஆட்சித் தலைவர் இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்திட ஆணை வழங்குமாறு" தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலே பார்வை 7-ல் காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, தனியரது உரிய அசல் ஆவணங்களுடன் மீள பெறப்பட்ட முன்மொழிவானது மேலே 6-ல் காணும் அரசாணையின்படி நடவடிக்கை மேற்கோள்ளும் பொருட்டு நன்கு ஆய்வு செய்யப்பட்டது. அவ்விபரம் பின்வருமாறு விவரிக்கப்படுகிறது.

1. மறைந்த அரசு ஊழியர் திரு.(லேட்).ஆர்.நவநீதகிருஷ்ணன் தகுதிகாண் பருவம் முடிக்கப் பெற்ற நிரந்தரப் (Approved Probationer and Full Member) பணியாளர் ஆவார்.

2. மறைந்த அரசு ஊழியர் திரு.(லேட்).ஆர்.நவநீதகிருஷ்ணனன் என்பவரது பெயரில் ரூ.15,00,000/- மதிப்பில் R.C.C வீடு உள்ளதாகவும், இதைத் தவிர வேறு அசையும் மற்றும் அசையா சொத்துக்களல் ஏதுமில்லை எனவும், இவர் இறந்த பின்பு, அன்னாரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும்,

இவரது மனைவி திருமதி.சித்ரா என்பவர் மறுமணம் புரியவில்லை எனவும், இவரது குடும்பத்தில் எவரும் அரசு பணி மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியவில்லை எனவும் திண்டுக்கல் கிழக்கு வட்டாட்சியர் ப.மு.எண்:9600/2018/அ1, நாள்:26.11.2018இன்படி சான்றளித்துள்ளார்.

3. மறைந்த அரசு ஊழியர் திரு.(லேட்).ஆர்.நவநீதகிருஷ்ணனன் என்பவரது வாரிசுதாரரும் மகனுமாகிய திரு.என்.சந்தானகிருஷ்ணன் என்பவர் 16.11.2018 அன்று விண்ணப்பித்துள்ளார். அதாவது அரசு விதிகளின்படி மூன்றாண்டுகளுக்குள் விண்ணப்பித்துள்ளார்.
4. அவரது பிறந்த தேதி 08.05.1988ஆகும். பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரது வயது 30 ஆகும். பணி நியமன நாளில் தனியரின் வயது 30 ஆகும்.
5. அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளதற்கான கல்வி சான்றுகளின் மெய்த்தன்மை "சென்னை அரசுத் தேர்வுகள் இயக்கக இணை இயக்குநர்(பணியாளர்) அவர்களின் கடித ஓ.மு.எண்:306599/வி3/ 2018, நாள்:19.12.2018இன்படி வரப்பெற்றுள்ளது.
6. தனியருக்கு பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை.

மேலே பார்வை 7-ல் காணும் அரசாணை மற்றும் 9-ல் காணும் கடிதத்தின்படி, திரு.என்.சந்தானகிருஷ்ணன் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் 31.12.2018 அன்று பணிநியமனம் பெற்றுள்ளதாலும், தனியர் பொருட்டு விதித்தளர்வு ஏதும் தேவையில்லையென அறியப்படுவதாலும் மற்றும் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதாலும், தமிழ்நாடு அமைச்சுப் பணியில் திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 31.12.2018 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திண்டுக்கல்.

பெறுநர் :-

திரு.என்.சந்தானகிருஷ்ணன்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஆட்சியரகம்.
வளர்ச்சிப் பிரிவு,
திண்டுக்கல். (உரிய வழிமுறையாக)

நகல் :-

1. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், பனகல் மாளிகை,சைதாப்பேட்டை, சென்னை-15.
2. ஊ.வ.6 பிரிவு.
3. ஊ.வ.1 இருப்பு கோப்பிற்கு.